செய்தி வெளியீடு எண்:**337** **நாள்:**3**0.6.2009**

**செய்தி வெளியீடு–30.6.2009**

## அறிவியல் தமிழ் மன்றத்தின் புதிய தலைவராக கவிஞர் திரு.கா. வேழவேந்தன் நியமனம் !

# முதல்வர் கலைஞர் ஆணை !

**தமிழ் வளர்ச்சித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அறிவியல் தமிழ் மன்றத்தின் தலைவராக திரு.மணவை முஸ்தபா அவர்கள் 2006ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றி வந்தார். அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டு, கடந்த பல மாதங்களாக மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு வருவதால், அறிவியல் தமிழ்மன்றத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து தாமாக முன்வந்து விலகிக் கொள்ள விரும்புவதாக தற்போது அரசுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். அக்கடிதத்தினை ஏற்று, திரு.மணவை முஸ்தபா அவர்களை அறிவியல் தமிழ் மன்றத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து விடுவித்தும், அவரது இடத்தில் புதிய தலைவராக கவிஞர் திரு.கா.வேழவேந்தன் அவர்களை நியமனம் செய்தும் முதலமைச்சர் கலைஞர் இன்று (30.6.2009) ஆணையிட்டுள்ளார்.**

*****

வெளியீடு:**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**